# இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்

# பதவி வெற்றிடங்கள்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனமானது அரச வைத்தியசாலைகளுக்கான மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்யும் ஒரே நிறுவனமாகும். மேலும் இலங்கையில் தனியார் துறைக்கான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யும் விநியோகிக்கும் முன்னணி நிறுவனமாகும்.

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக பொருத்தமான தகைமைகளைக் கொண்ட இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில்நுட்ப மதிப்பீட்டு அதிகாரி (JM 1.1 - தரம் II) - 03 வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படையில்**
**TECHNICAL EVALUATION OFFICER (JM 1.1 – GRADE II)**

**தகைமைகள்:**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பாடத்தை உள்ளடக்கிய விஞ்ஞானமாணி (BSc) பொதுப் பட்டம் / இரசாயனவியலில் விஞ்ஞானமாணி (BSc) சிறப்புப் பட்டம் அல்லது அதற்குச் சமமான தகைமை

**மற்றும்**

(ஆ) கணனி ஆற்றல்

**மற்றும்**

(இ) அரசாங்கம் / கூட்டுத்தாபனம் / சபை / நியாயாதிக்க நிறுவனம் / கீர்த்தி வாய்ந்த வர்த்தக அமைப்பொன்றில் பெறுகைக் கேள்விகள் / தொழில்நுட்ப மதிப்பீடு தொடர்பான துறையில் குறைந்தபட்சம் 01 வருட கால தகைமைக்குப் பின்னரான அனுபவம்

**கவனிக்கவும்:** இரசாயனப் பகுப்பாய்வு பின்புலம் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**சம்பள அளவு:** ரூபா 53,250/-, 945/- x 10, 1,420/- x 18 - 88,260/-
(மாதாந்த சம்பளம் ஏறத்தாழ 145,842/- ரூபாவாகவிருக்கும்)

**வயதெல்லை:** 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் மாதாந்த வருகை ஊக்குவிப்புத் தொகை, பயன்படுத்தப்படாத விடுமுறையை பணமாக்குதல், வருடாந்த போனஸ், நலன்புரி நன்மைகள், மருத்துவ நன்மைகள் மற்றும் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற ஊழியர் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கான மருத்துவ காப்புறுதித் திட்டம் உட்பட கவர்ச்சிகரமான நன்மைகளைப் பெறுவர்.

வயது, தகைமைகள், பயிற்சி, வேலை அனுபவம், தற்போதைய பதவி நிலை, சம்பள நிலை மற்றும் அளவு முன்னர் வகித்த பதவி, முன்னைய வேலை வழங்குநருடன் இணைந்த மற்றும் விலகிய திகதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, சகல சான்றிதழ்களின் பிரதிகள் என்பவற்றை உள்ளடக்கிய முழு சுய விபரத்துடன் உறவினரல்லாத இரு சான்றுபகர்வோரின் பெயர் மற்றும் முகவரிகள் சகிதம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தயவுசெய்து கவனத்திற் கொள்ளவும்.**

அரச துறை அமைப்புகளில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் 2025-02-24ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**பிரதிப் பொது முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்),**
**இலங்கை அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்,**
**"மெஹெவர பியஸ" 16ஆம் தளம்,**
**இல. 41, கிருள வீதி, நாராஹென்பிட்டி.**

**தொலைபேசி: 011 2320356-9**